

பருத்தித்துறை ஆத்தியடியைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும்
தமிழீழ விடுதலைப் புலிகளின்
பருத்தித்துறை பொறுப்பாளருமான

வீரவேங்கை

# கப்டன் மொறிஸ்

அவர்களின்

## மூன்றாம் ஆண்டு

# வீர அஞ்சலி மலர்

# கருத்தரிக்கும் கல்லறைக்குள் படுத்திருக்கும் வீரப்புலி



தாயின் மடியில் மலராய் — போர் மண்ணில் விதையாய்

**12-09-1969** — **01-09-1989**

"பரதன்" என வீடழைக்க
"மொறிஸ்" என நாடழைக்க
"எம் ஓ" என கணம் இயங்கி
"அம்மோ" என எதிரிகளை
இம்மண்ணில் அலறவைத்த

தமிழீழ விடுதலைப் புலிகளின் பருத்தித்துறை பொறுப்பாளர்

# கப்டன் மொறிஸ்

## ( தி. பரதராஜன் )

# கருத்தரிக்கும் கல்லறைக்குள்
# படுத்திருக்கும்
# வீரப்புலி



தாயின் மடியில் மலராய் | போர் மண்ணில் விதையாய்

**12-09-1969** | **01-05-1989**

"பரதன்" என வீடழைக்க
"மொறிஸ்" என நாடழைக்க
"எம் ஓ" என கணம் இயங்கி
"அம்மோ" என எதிரிகளை
இம்மண்ணில் அலறவைத்த

தமிழீழ விடுதலைப் புலிகளின் பருத்தித்துறை பொறுப்பாளர்

# கப்டன் மொறிஸ்
## ( தி. பரதராஜன் )



“ பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ
வானிலும் நனி சிறந்தனவே ”

1989-ம் ஆண்டு தொழிலாளர் தினத்தன்று
[ மே -1 ] இந்தியகெடுபிடி இராணுவத்தினரின் கபடமாய
வியூகத்தில் நேரில் போரிட்டு வீரமரணமடைந்த

# கப்டன் மொறிஸ்

## அவர்கட்கு

எமது அஞ்சலிகள்.

உங்கள் இலட்சியத்தில் உறுதிகொண்டு எதிரியே வியக்கும்
வண்ணம் உண்மையான வீரப் புருஷனாக நின்று
ஈழத்தாயகத்தின் வீர அபிமன்யுவாகத் திகழ்ந்த
எமது பரதனுக்கு ( மொறிஸ் )
பணிவான **அஞ்சலிகள்** உரித்தாகுக.

பொதுமக்கள்
ஆத்தியடி - புலோலி மத்தி

# நம் அருமைச் செல்வமே பரதா!

மூன்றாண்டு சென்றாலும் உன்
சிரித்த முகம் தோன்றி வதைக்குதடா
தமிழ் ஈழமும் வந்திடுமே - நம்
தவச் செல்வர் வந்திடுவர் - என்று
காத்திருந்தோம் காத்திருந்தோம்
அன்னியப்படை வந்து
மொறிஸ் மொறிஸ் - என்று
கிலியில் அலைந்ததடா
பட்ட துயர் போதுமென்று
பாரினில் உன் நாமம் பேர்சொல்லி
எமை அழைக்க ஓர் புகழை எமக்கு
ஈந்து விட்டு எங்கு சென்று
மறைந்தாயடா எம் செல்வமகனே!
உன் கனவுகள் நனவாகுமென்று
காத்திருக்கிறோமடா செல்வமே!

அன்பு அப்பா, அம்மா.

* * *

## தம்பியல்லவோடா நீ

ஆர்வமுடன் கலை பயில்றாய்
ஆசையுடன் நிதம் படித்தாய்
கோரமனச் சிங்களவன்
குழிபறிக்க முனைகையிலே
ஆற்பரித்தாய் அலையானாய்
நாளிதல்ல நாம் படிக்க
நம்மண்ணைக் காத்திடவே
போரிடுவோம் என உரைத்து
புறப்பட்டாய் புலியானாய்
வீரமுடன் நீ படித்த
போர்க்களத்துப் புதுமைகளை
நாடெல்லாம் நிதம் சொல்ல
நான் திகைத்தேன்!

இருட்டினிலே நிழலாடப்
புரட்டுகின்ற விழிகளுடன்
தாய்மடியில் புரண்டிருந்த
பரதனா இவன்?
நரித் தந்திரங்களுடன்
நய வஞ்சகங்களுடன்
நம் மண்ணை அள்ள வந்து
கோட்டைகளில் கால் பதித்த
மாற்றானின் மார்புகளை
மானமுடன் துளைத்தெறிந்தாய்
போர்க்காலக் கதைகளிலே
புகுந்து நின்றாய்!

களம்கண்டாய்
களம் கண்டாய்
நிதம் கொண்டாய்
தொண்டமானாற்றிலே
தூயகாவியம் படைத்தாய்
பூனகரியிலே பசீலனுடன்
படை கொண்டாய்
பருத்தித்துறையினிலே
பாசறைகள் ஆடவைத்தாய்
பாசமுடன் எம்மக்கள்
பாதையிலே செல்லவைத்தாய்
திசை தெரியா இளைஞர்களை
தேசவழி திருப்பி வைத்தாய்
எதையெல்லாம் நான் நினைக்க
எப்படிநான் எடுத்துரைக்க
நேசமுடன் நான் வளர்த்த
தம்பியல்லவோடா நீ.

அமைதிப்படை எனவந்த
ஆக்கிரமிப்பதனை
வசைகொண்டாய் — தலைவரது
வழிநிற்போம் நாமென்றாய்
புரியவில்லை எனக்குமுதல்!
புரியவைத்தாய்
ராஜரீகங்கள் உரைத்தாய்
போர் முறையின் பயனுரைத்தாய்
நேசமுடன் நான் வளர்த்த
தம்பியல்லவோடா நீ!
போர் முனையில் வரிப்புலியாய்
வலிந்து நின்றாய்
ஹிந்தியரும் சீக்கியரும்
தம்குரலில் சீறவைத்தாய் – பின்
அவர் வாயடைத்தாய்.

முக்கோணத்தாக்குதலில்
முன்நின்று முரசொலித்தாய்
ஈழக்
கறை களைத்தாய்
நம்மவர்கள் நாயாக
நீ மடிந்தாய்
நாட்டில் புகழ் நிறைத்தாய்
என்ன இந்த நாளென்று
எம்மவரை ஏங்கவைத்தாய்
கங்கைகளை யமுனைகளை
எம்மண்ணில் ஓடவைத்தாய்
முந்நூறு ஆண்டென்ன
முக்கோடி ஆண்டினிலும்
நான் மறவேன்
நம்மவர் மறவர்
பொன் நூறு கொட்டியென்ன
புதினமடா
இவ்வீர இளம் தம்பி
எம்மண்ணிற் காற்றியதோ
புலிவீரப் பணியதுவே

புது அலையாய் வளருதடா.
தம்பி நீ நிதமெங்கள்
ஈழத்து வீரர்களைக்
கல்லறையுள்ளிருந்து
களத்துக்கு அனுப்பி வைப்பாய்.

அண்ணன்

முல்லைத்தீவு மாவட்ட மாவீரர் நாள் விழாவில்

கூடவந்த தோழர்களிற்கு
ஓடவழி செய்து விட்டு
தனித்திரண்டு புலிகளுடன்
களத்தினிலே போராடி
பாரதத்துப் பேய்க்களத்து
பாவரத்தம் களம் சிதற
கோரமுடன் படை சரித்து
வீரமுடன் மண் சாய்ந்த
தீரமகன் மொறிஸ் எங்கள்
தேசத்து மாவீரன்........

❀ விழாக் கவியில் இருந்து ❀

* * *

## எப்படி மறந்திருப்போம்?

எம்மண்ணின் மாவீரனே! பரதா!
உன்மறைவின் பின் மூன்று வருடங்கள்
எவ்வளவு கொடூரமானவை அவை
உன்னுடன் இணைந்து வாழ்ந்த
ஆருயிர் நண்பர்கள் பலர்
இப்போ - உன்கல்லறையை சுற்றி அவர்கள்.

மூத்த சகோதரனின் மூன்றாவது புதல்வனாய்
பால் வதனப் பரதனாய்
இளைய சகோதரனின் மூத்த புதல்வனாய்
மொறிஸ் என்று பாலனாய்
என் வயிற்றில் உதைத்து மகிழ்வீக்கும்
அற்புதக் கருவுயிராய்
என்றும் நின்முகமே நினைவுகளாய்
நம் வாழ்வோடு பிணைந்து
வாழ்கின்றாய் - நீ சாகவில்லை!

சின்னவயதில் நீ சிட்டாய் திரிகையில்
கையோடு கைசேர்த்து ஓடி விளையாடி
குத்துச்சண்டையிட்டு கும்மாளம் போட்ட
உன்னருமை தம்பி சபா - மயூரனாய்
தலைவன் தோளுக்கு தோள் கொடுத்து
வாழ்கின்றான் மறவனாய்
கண்ணே நின்பணிகள் முடியுமுன்னே
கனவோடு சருகியதாய் கவலை கொள்ளாதே
உன்தம்பியும் தோழர்களும் தொடர்கின்றார்
மண் பணிகள்.

இளப்புக்களும் அழிவுகளும் எல்லையின்றி குவிந்தாலும்
நம்பிக்கை இளக்கவில்லை நாம்
கடமைகளை மறக்கவில்லை
உன் தத்துவங்கள் கொள்கைகள் - நம்
நெஞ்சை விட்டுப் போகவில்லை
இனிய சகோதரனே.

உன்சிரிப்பின் ஒளியழகு
இன்றும் நம் நினைவுகளிலே
உனது மொழியின் சுபநாதம்
இன்றும் நம் செவிகளிலே
எப்படி மறந்திருப்போம்
எம் இனிய செல்வனை?
பரதா நீ சாகவில்லை
வாழ்கின்றாய் எம்மோடு.

லண்டனில் இருந்து உனதன்பு
இளையக்கா.

✲ ✲ ✲

# எதை நினைக்க? எதை மறக்க?

ஓ! மாவீரனே! பரதா!
உன் பிஞ்சுப் பாதச்சுவடுகள்
அழிய வில்லையடா!
ஆண்டு மூன்று சென்றதுவே — ஆனால்
நின் நினைவுகளோ அழியவில்லை
உன்னுடன் கூடவந்து
உன் சோதரிக்காய் வாழ்ந்திருக்கும்
உனதருமை "டக்கிமய" நீ ஒரு கணம்
நினைக்காமல் உறைந்து போனாயோ?
பரதா! உன் பாதம் தொடர்ந்து
அலை அலையாய் அணிதிரண்ட
தோழர்களின் நிழல்களுடன்
உன் தம்பி இன்னமும்
உறுதியுடன் தொடர்வதை
உன் உள்ளம் அறியாதோ?
பரதா! இரவு பகல் பாராமல்,
விழித்திருந்து, காத்திருந்து,
விடி விளக்கெரித்திருந்து
அந்நிய இராணுவத்தின் அடி உதையை எதிர்பார்த்து
தாய்மையின் வீரத்தை தன்மானத்தோடு
உணர்த்திய உன் தாயை மறந்தாயோ?
உன் சோதரிகள் பட்டதுயர் சொல்லிமாளமுன்னர்
சோதனையோடு வேதனையைத் தந்து விட்ட
என் பரதா! எம் சோகங்கள் உன் வீரத்தின
விழுதுகள் என்பதை நீ மறந்தாயோ?
வீரத்தின் விளைநிலமே! விறல் மிகு வேங்கையே
பரதா! உன் வீரமதை சொல்லி மாளாது
வியக்கின்ற உன் பாசமிகு மக்களை
பாராமல் பறந்தாயோ?

முகாம் களைச் சுற்றி கண்ணிகளை வைத்து
பின் கதிகலங்க வைத்த கதை
காதில் கேட்டபின்னும் வீரத்தை ஊட்டி
விதை போட்டமக்களை நாம் மறப்போமா?

M. O. ( Mines Operator ) எனும் பெயர்பெற்று
வீணர்களை விசிறடித்த வேங்கையுன்
வீரத்தை இன்றும் நாம் மறப்போமா?
வடமராட்சி தன்னில் முதன் முதலில்
ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஜக்வண்டிமீது
குண்டுத் தாக்குதலை நிகழ்த்தி
நிலைகுலைய வைத்த உன்
வீரத்தின் விளையாட்டை
என்றும் நாம் மறப்போமா?
எதை நினைத்து எதை மறக்க
என்று தெரியாமல ஏங்கித்தவித்திருக்கும்
உன் சோதர சோதரிகள் படும்துயரை
பார்த்து ஓர் பதில் தருவாயோ?

- பிரபாக்கா, டக்கி (கணேசத்தான்) -

✲ ✲ ✲

## மறவாது உன் நினைவு மலரும் உன்கனவு

துறைமுகப் பட்டினமாம் பருத்தித்துறை உன் பொறுப்பில்
இருந்தது ஒருகாலம் இன்று அது இறந்த காலம் - ஈழப்
பறை கேட்டுப் பறந்து சென்ற இந்திய அமைதிப்படை
பயந்தது ஒருகாலம் இன்று அது பழைய காலம்
மொறிஸ்சென்ற பெயருக்குப் பொருத்தமானாய்
கடமை மிக்கவொரு காவல வீரன் நீயானாய் - ஈழப்
பெருமைக்கும் உயர்வுக்கும் ஆற்மதியாகம் செய்தாய்
படைதிரட்டிப் போர்முனையில் சம்ஹாரம் செய்தாய்
தருணம் பார்த்திருந்து தீயவரைத் தொலைத்தாய் - உன்
மரணம் கூட உன்னை வென்றபின்னும் சிரித்தாய்
வருணன் எம் விழியில் வாழ்வதற்கோ விழித்தாய்
விடுதலை வேங்கை நீ வராமல் எங்கு சென்றாய்.

கண்ணீர்ப் பூக்களினால் கவிமாலை கட்டி வைத்தோம்
கண்ணில் நிறைந்தவரைப் புவிநீங்க விட்டு விட்டோம்
பன்னீர்ப் பூக்களினால் பூமாலை கட்டி வைத்தோம்
செந்நீர் சுரக்கு மெங்கள் இதயத்தை நாம் மறந்தோம்
உன்னால் விடியுமந்த உதயத்தைத் தேடுகின்றோம்
வெந்நீர்த் தொட்டி வீழ் மண்புழுப்போல் துடிக்கிறோம்
வெம்பகை வெட்டிச் சாய்த்த வீரனுன்னை என்று காண்போம்

கண்ணா நின் கருணை முகம் காண்போமா நாங்கள்
மண் மீட்கச் சென்றவரைக் காணவில்லைக் கண்கள்
மேகத்தில் மறைந்தவரைக் கண்டிடுமோ விண்மீன்கள்
எண்ணரிய சாதனைகள் செய்தவரே உன் கால்கள்
நடந்த வழி தொடர்வதற்கு உன் நினைவே ஊன்றுகோல்
அண்ணன்மார் இட்டபணி செய்தனையே உன் கைகள்
அர்ப்பணமும் ஆவியென்று கலங்குதப்பா கண்மணிகள்.

மயிலிட்டி - அண்ணா குடும்பத்தினர்.

* * *

## நெஞ்சத்தின் நினைவலைகள்

தங்க கொழுந்தே தவமகனே பாரதா
மொறிஸ் என்று பெயரெடுத்தாய்
முறிந்து போய் விட்டாயோ
செல்லக்கதையும் சிரிப்பும் தினம் தினம் நீ
மெல்ல நடக்கும் நிதானிப்பும்
எல்லாமே ஓர் நொடியுள் மாறியதேன் தோழா
நெஞ்சத்து நினை வலையாகி
நீண்ட துயில் கொள்கிறாயோ உன்
மீழாத் துயில் எம்மை வாட்டி வதைக்குதடா
வாழ்வில் வசந்தம் வந்துன்
வாசலிலே காத்திருக்க
எங்கேநீ சென்றாய் எங்கள் இனியவனே
சேற்றில் வளர்ந்த செந்தாமரை முகத்தோன்
மாற்றான் படைகுவிக்க வடமராட்ச்சியில் பிறந்து
பருத்தி நகரின் படைப்பொறுப்பாளன் ஆனாய் நீ
தலைவரின் கட்டளையை தவறாது செய்தாயோ நீ
உலவிய வீதிகள் உருக்குலைந்து தோன்றுதடா
உன்திருமுகம் காணத்துடிக்கிறோம்
தேடினோம் ...... தேடினோம்
விழியதனில் உன்உருவம் தெரியுதடா
பாரதா.........பாரதா
குண்டடிபட்டாய் என்று செய்திகேட்டு

செயலிழந்து நிற்கிறோம் நீயோ
மூன்றாண்டே சென்றாலும் முகம்மலர்ந்து நிற்கின்றாய்
வீரவேங்கையாகி வெற்றி நடை போடுகின்றாய்
எங்கே நீ சென்றாய்
தங்கச்சுடரே தமிழ்மக்கள் இன்றுபடும்
சொல்லொணாப் பீதீயினை
நல்லவனே நீசென்று நடந்தபடி செப்பினையோ
அன்பு நிறைகுளத்தில் அழகுமலர்பூப்பது போல் எம்முடனே
தோளோடு தோள்நின்று தோழா எம் சிந்தைகுலையச்
சிறகடித்துப் பறந்துவிட்டாய் நீ
சொல்லி யழுவதற்க்குச் சொல்லேதும் உண்டோ
ஈழமக்களுக்கு நீ ஆற்றிய பணியதனை?

கீழ்க்கரவைச் செழியன்